விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 21 துல் ஹஃதா: பிறை: 10 இதழ்: 112

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-06-1990

## மக்கள் வங்கி கிளைகளில் அடகு நகைகள் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

அடகு நகைகள் மீளளித்தல் தொடர்பாக மக்கள்வங்கி யாழ். பிராந்தியத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

"எமது பகுதி வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்து, அவற்றை மீட்டு கொள்வதற்காக 1989 செப்டம்பர் மாதத்திற்கு முன்

(8-ம் பக்கம் பார்க்க)

### இத்தாலியில்—

## வேலை பெற்றுதருவ தாககூறி 6 லட்சம் ரூபா மோசடி

(கொழும்பு)

இத்தாலி தேசத்தில் விமான ஓட்டியாகப் பதவி வகிக்கும் இலங்கையர் ஒருவர், அங்கு கூட்டிச் சென்று வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 6 லட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்குள்ள உள்ளூர் விமான சேவையில் கடமையாற்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

# புலிகள் - அரசு பேச்சுவார்த்தை

# மாவட்ட மட்டத்திலும் நடக்கும்

## இருதரப்பு உறவை வலுப்படுத்த புதிய முயற்சி!

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்குமிடையே மாவட்ட மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன. விடுதலைப் புலிகளுடன் மாவட்ட மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும்விதமாகவும், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடனான அதன் உறவைப் பலப்படுத்திக்கொள்ளும்விதமாகவும் மாவட்ட மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகக் கூறப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் மாநாடுகளை நடத்துவதன்மூலம் இந்தப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும்.**

விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழுவுக்கும், நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் தலைமையிலான முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர்களுக்கும் இடையே நேற்று முன் தினம் நடைபெற்றபேச்சுவார்த்தையின்போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது

உயர்கல்வி அமைச்சில் சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளுக்கும், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள்குறித்தும் ஆராயப்பட்டன.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அரசியல் வெற்றிடம் நிரப்பப்படுமானால் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்குத் திருப்திகரமான தீர்வுகள் காணமுடியும்

(8-ம் பக்கம் பார்க்க)

## விபரங்கள் இன்று பதியப்படும்

[யாழ்ப்பாணம்]

வலிகாமப் பகுதியில் மாற்று இயக்கத்தினரால் கொலைசெய்யப்பட்டவர்களின் விபரங்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் கோண்டாவில் செயலகத்தில் இன்று பதிவு செய்யப்படவிருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் சத்தியக்கடதாசியுடன் கோண்டாவில் விடுதலைப் புலிகள் செயலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். [152]

### ஆறு லட்சம்—

## அடையாள அட்டைகள் அபகரிக்கப்பட்டதாக தகவல்

[கொழும்பு]

கடந்த சில காலமாக நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின்போது சுமார் 6 லட்சம் அடையாள அட்டைகளை நாசகார சக்திகள் அபகரித்துச் சென்றுள்ளதாக அடையாள அட்டைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி திரு. குலரத்தின தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டைகளை இழந்தவர்கள் மீண்டும் இதனைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான வழிமுறையை தாம் அறிமுகம் செய்துள்ளதாகவும் அந்த சலுகை எதிர் வரும் செப்ரம்பர் மாதம் 30ம் திகதி வரையே செல்லுபடியாகும் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டைகளை இழந்தவர்கள் தத்தம் கிராம சேவையாளரிடமிருந்து தமது இழப்பை தெரியப்படுத்தி கடிதத்தைப்பெற்று அருகிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதி

(8ம் பக்கம் பார்க்க)

### சமூக அமைதியின்மையை

## பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்! - ஜனாதிபதி

[குருநாகல்]

"இன விகிதாசார அடிப்படையில் தகுதியானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும்" சமூக அமைதியின்மையை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர்.பிரேமதாசா குருநாகல் மாவட்டத்தில் நேற்று மாவட்ட அதிகாரிகளுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்த கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி பல்கலைக்கழகத்துடன் இணையுமா?

[மட்டக்களப்பு]

"மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியைக் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் விடயம் இந்து கலாசார அமைச்சிடம் மட்டும் தங்கி இருக்கவில்லை. கலாசார அமைச்சு, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றுடனும் பேசியே இதற்கு முடிவு காணவேண்டும்."

இவ்வாறு இந்து கலாசார ராஜாங்க அமைச்சின் செயலாளரான திரு கே. லோகேஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா விவசாய கல்லூரிக்கு இவர்கள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாயவிஞ்ஞானம் புவியியல் ஆகிய ஆறுபாடங்களில் மூன்று பாடங்களில் ஒரேதரத்தில் சித்தியடைந்தவர்கள் வவுனியா விவசாயக்

(8-ம் பக்கம் பார்க்க)

### போக்குவரத்துச் சபை—

## மக்கள் மயப்படுத்தும் திட்டம் டிசம்பர் வரை ஒத்திவைப்பு!

[கொழும்பு]

இலங்கைப் போக்குவரத்துச் சபை இவ்வாண்டு டிசம்பர் மாதம்வரையும் தொடர்ந்து தற்போதைய அமைப்புரீதியாகவே செயற்படுமென்றும், மக்கள் மயப்படுத்தும் புதிய திட்டம் அடுத்தஆண்டுமுதலே செயல்வடிவம் பெறுமென்றும் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். [அ]

### கொழும்பு பேச்சுவார்த்தையில்—

## கலந்துகொண்ட புலிகள் இன்று யாழ். திரும்புவர்

(யாழ்ப்பாணம்)

"கொழும்பில் அரசுடன் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திரும்புகிறார்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) ஏற்கனவே யாழ்ப்பாணம் திரும்பிவிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கமிஷன் அடிப்படையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

[கொழும்பு]

வேலையற்ற இளைஞர்களுக்கு கமிஷன் அடிப்படையில் வேலை வழங்கும் திட்டமொன்றை மக்கள் வங்கி அமுல்நடத்தவுள்ளதென்று மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு ஏ ஆர்.விஜயசேகரா தெரிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமுல் நடத்தப்படும் 'ஜனசவிய' கடன் வழங்கும் வேலைகளில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டு, மாதாந்தம் 500 ரூபா வேதனமாக வழங்கப் படுவதுடன், இவர்கள் ஆற்றும் சேவையின்

(8ம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

### ஆண்டு-4 பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடிப் படையாக (4ம் ஆண்டு அரை வாசிப் பாடத்திட்டத்திற்குள்) 10-06-90 ஞாயிறு மு.ப.10-30/ பி.ப. 1-00 மணிக்கு நடை பெறும், பதிவு செய்யவும். ஆண்டு 4ற்கு மாதிரி வகுப்பு கள் (தமிழ் / கணிதம் / ஆங்கி லம்) நடை பெறுகின்றன. புதிய கல்வி நிலையம், கெங்கா தரன் ஆஸ்பத்திரியடி, வண் ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-3928)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(கொக்குவில்)

திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதிகளில் வீதிகளில் இரவும் பகலும் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதி கரித்துள்ளது. (135)

# அழியும் நிலையில் மயிலிட்டி கடற்றொழில் துறைமுகம்

[யாழ்ப்பாணம்]

மயிலிட்டி கடற்றொழில் துறைமுகம் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

கடந்த காலத்தில் நடை பெற்ற இலங்கை இராணு வத் தாக்குதல் காரணமாக வும், இந்திய அமைதிப்படை யின் தாக்குதல காரணமாக வும் மேற்படி துறைமுகப் பகு திகள் சேதமடைந்திருந்தன.

1974 ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட மயிலிட்டி கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி வேலை கள் இன்றுவரை முற்றாக பூர்த்தி செய்யப்படவில்லை. இந்தக் கடற்றொழில் துறை முக அபிவிருத்திவேலை கடற் றொழில் துறைமுகக் கூட்டுத் தாபனத்தினால் மேற்கொள் ளப்பட்டு வந்தது குறிப்பிடத் தக்கது.

நங்கூரமிட்டு நிறுத்துமிடங் கள் சேதமடைந்து காணப் படுகின்றன. கடலரிப்பினால் இந்தக் கடற்றொழில் துறை முகம் அழிந்துபோகும்நிலையில் காணப்படுகின்றது. [153]

## அபகரிக்கப்பட்ட அடையாளஅட்டை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நாசகார சக்திகளினால் அப கரித்துச்செல்லப்பட்ட 500க்கு அதிகமான தேசிய அடையாள அட்டைகளை நுகேகொடை பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கோஷ்டி கண்டுபிடித்துள்ளது. (அ)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உயர்தர வகுப்புகளில் வர்த் தகக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் கருத்தரங்கு அண்மையில் மத்திய கல்லூரி யில் வர்த்தகக் கல்வியதிகாரி திரு. இ. சிவராசா தலைமை யில் நடைபெற்றது.

விரிவுரையாளர் க. தேவ ராசா, தே.ஜெயராமன், கே. அருள்வேல், செல்வி வி. முரு கேசு ஆகியோர் முறையே வியாபாரம், வங்கிகள், சரக் கிருப்பு மதித்தல், கணக்கியல் முதலியனபற்றி கற்பித்தல் உத்திகளை விளக்கினார்கள்.

## "எமது இணக்க மன்றங்கள்மூலம் நீதி, நியாயம் கிடைக்க வேண்டும்"

- பிரசாத்

(கிளிநொச்சி)

எமது இணக்க மன்றங்கள் மூலம் மக்களுக்கு நீதியும் நியா யமும் கிடைக்கட்டும் என்று கிளிநொச்சி நகரில் இணக்க மன்ற நிர்வாகிகள் தெரிவிற்கு தலைமைவகித்து உரையாற்று கையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி நகரப் பொறுப்பாளர் திரு. பிரசாத் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி அருள்மிகு கந்த சாமி கோவில் மண்டபத்தில் கிளிநொச்சி நகரம், ஆனந்த புரம், கணேசபுரம் ஆகிய சிற்றூர் அவைப் பிரிவிற்கான இணக்கமன்று நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

புலிகளின் நகரப்பிரிவு பொறுப்பாளர் திரு. பிரசாத் மேலும் பேசுகையில்: "உண்மை, நேர்மை, சத்தி யம் ஆகியவற்றிற்கு கட்டுப் பட்டு இணக்கமன்று பிரதிநிதி கள்செயல்படவேண்டும். நல்ல தீர்ப்புக்களை மக்களுக்குவழங்க வேண்டும்.

"விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழ் மக்களின் அன்பிலும் அரவணைப்பாலும் வளர்ந்தாகும், முன்னணியின் இலட்சியம் ஈடேற அனைவரும் பாடுபட வேண்டும்.

"கிராமசேவையாளர்முதல் கொண்டு எந்த அரச உத்தி யோகஸ்தர்களும் மதுபோதை யில் கடமை நேரத்தில் இருந் தால் அது மக்களுக்கு செய்யும் துரோகமாகும். இவ்வாறான வர்களுக்கு உரிய தண்டனை வழங்கவும்தயங்கமாட்டோம்' என்றார்.

இணக்கசபை நிர்வாகிகள் தெரிவில் செயலாளராக க. கணேசபிள்ளை, உதவிச் செய லாளர் திரு. சண்முகம்,பொரு ளாளர் கு. இராமச்சந்திரன் ஆகியோர் தெரிவானார்கள். (83)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி யோகேஸ்வரி மாணிக்கம்**

**மறைவு : 04-06-1984**

எங்கள் ஒளி விளக்காக விளங்கி அன்புடனும் பண் புடனும் வாழ்ந்து எம்மை எல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

No. 11, புது அத்தியடி வீதி,
அத்தியடி. (சி 3931)

## "இன்றைய நல்ல சூழ்நிலை ஒரு ஸ்திரமான நிலை அல்ல"

### நாடு திரும்பும் பிரெஞ்சு டாக்டர் கவலை

[மட்டக்களப்பு]

"மட்டக்களப்பு மாகாண வைத்தியசாலை, சுமார் எட்டு லட்சம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டியுள்ளது. கிழக் குப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் மட்டக்களப்பு வைத் தியசாலையையே நாடிவருகின் றனர். இங்கு மாதம் சுமார் 300 பேருக்கு சத்திரசிகிச்சை நடைபெறுகிறது. ஆனால் போதிய டாக்டர்களோ, மரு ந்து வசதிகளோ இங்குஇல்லை. இதுபற்றி மட்டக்களப்பில் உள்ள மேலதிகாரிகளும் கவ லைப்படுவதாகத் தெரிய வில்லை"

இவ்வாறு 'எல்லை இல்லாத டாக்டர்கள்' என்ற பிரெஞ்சு நாட்டு அமைப்பைச்சேர்ந்த டாக்டர் ஆன் வின்சன்ட், மட்டக்களப்பில் நடத்திய பத் திரிகையாளர்கள் மாநாட்டில் கூறினார்.

மட்டக்களப்பு வைத்திய சாலையில் கடந்த 9 மாதகாலம் சேவையாற்றி நாடு திரும்ப வுள்ள இவர் மேலும் கூறிய தாவது:

"இலங்கைக்கு 1986-ம் ஆண்டு பிற்பகுதியில் வந்த நாம் 87 ம் ஆண்டு செப்டம் பரில் மட்டக்களப்புக்கு வந் தோம். மன்னார், திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு தமிழ்ப்பகுதி களில்இப்போது சேவைசெய்து வருகிறோம். இருப்பினும் ஏனைய மாவட்டங்களில் கிடைக்கும் ஒத்துழைப்பு மட் டக்களப்பு நிர்வாகிகளிடம் இருந்து எமக்குக் கிடைப்ப தில்லை.

"மாந்தீவு தொழுநோயா ளர் வைத்தியசாலையைச் சென்று பார்த்தபோது பெரும் வேதனையாக இருந்தது. அங் குள்ள நோயாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந் தது அங்கு வழங்கப்படும் சாப்பாடு ஒழுங்காகவும் தர மானதாகவும் இல்லை. இதனால் மாந்தீவு வைத்தியசாலைமீது எமக்கு ஒருபற்று ஏற்பட்டது.

"இங்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று மட்டக்கள ப்பு பிரதேச சுகாதார சேவை கள் பணிப்பாளருடன் தொட ர்பு கொண்ட போது இந்த வைத்தியசாலை தனது நிருவா கத்தின்கீழ்இல்லை என்றுகூறி கையை விரித்து விட்டார். பின்னர் நாம் கொழும்புடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்றோம்.

"மாந்தீவு வைத்தியசாலை க்கு முக்கியமாக குடிநீர் தேவைப்பட்டது. 50 ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர்த் தாங்கி வசதிசெய்து கொடுத் துள்ளோம். இப்போது அங்கு 24 மணிநேரமும் தண்ணீர் வசதி உள்ளது முன்னர் ஒரு நாளைக்கு அரைமணி நேரத் துக்கே தண்ணீர் விநியோகிக் கப்பட்டது.

"மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் விளையா ட்டு அறை ஒன்றை அமைத் துள்ளோம். குறைமாதர் குழந் தைகளைச் சூடாக்கும் கருவி ஒன்றையும் வழங்கியுள்ளோம்.

"மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு எமது நாட்டிலிருந்து கூடுதலான சத்திரசிகிச்சைஉப கரணங்களை பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளோம். இவ் வகையில் விசேட சத்திரசிகி ச்சை நிபுணர், மயக்கமருந்து செலுத்துபவர், தொண்டை நோய் நிபுணர்களும் தருவிக் கப்படவுள்ளனர்.

"கடந்த காலங்களில் இங்கு நிலவிய சூழ்நிலைகளினால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டோம் இப்போது நல்ல சூழ்நிலை ஏற்

(7ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளருக்கு படகுகள் வழங்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாண உணவு வர்த்தக கடற்றொழில் அமைச்சு கண்ணாடி நூலிழை படகுகளையும் வெளியிணைப்பு இயந்திரங்களையும் கடந்த வாரம் முல்லைத்தீவில் வழங்கி உள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள பாதிக்கப்பட்ட ஐந்து கடற்றொழிலாளர்களுக்குமேற் படி படகுகளும், வெளி இணைப்பு இயந்திரங்களும் கள் ளப்பாடு என்ற இடத்தில் வழங்கப்பட்டது. [153]

## பத்திரிகை ஒட்டுப்புத்தக தலைப்புகள் தொகுப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இவ்லின் இரத்தினம் பல்லினப்பண் பாட்டு நிறுவனத்தில் நடை பெற்ற நூலகர் ஒன்றுகூடலில் தீர்மானித்தபடி யாழ். மாவட் டத்திலுள்ள நூலகங்களில் சேகரித்துப் பேணப்படவேண் டிய பத்திரிகை ஒட்டுப் புத்த கங்களுக்கான தலைப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளது.

நூலகங்களில் சேகரிக்கப்பட வேண்டிய தகவல்கள் பின்வரு மாறு இருத்தல் வேண்டும். சேவைப் பிரதேசத்திலுள்ள திருத்தலங்கள், அவற்றின் வரலாறு, திருவிழா பற்றிய செய்திகள், நூல் விமர்சனங் கள், அறிமுகங்கள், பொது அறிவுக்குறிய தகவல்துணுக்கு கள், பாடசாலை மாணவர் களுக்குரிய பாடவிதானம் உள்ளடக்கிய கட்டுரைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுவர்கள் பகுதி கள், சேவைப் பிரதேசத்தி லுள்ள அறிஞர்கள் பற்றிய செய்திக் குறிப்புகள், வரலாற் றுத் தகவல்கள், தேசியத் தலைவர்கள் பற்றிய வரலாற் றுக் குறிப்புகளும் செய்தித் துணுக்குகளும் நூலகவியல், தகவல் விஞ்ஞானம் தொடர் பான கட்டுரைகள் ஆகும்.

அத்துடன் சிறப்புச் சேக ரிப்புகளையும்சேகரித்துப்பேண லாம். (153)

## நினைவஞ்சலி

தோற்றம் :

04 - 06 - 1932



மறைவு :

17 - 05 - 1989

**அமரர் S. M. சுந்தரம்**

**(லதா பிரான்ட் ஆனைக்கோட்டை)**

காலன் உம்மை அழித்திடினும்
காலம் பல கழிந்திடினும்
எம்மை வளர்த்த எம்
அன்புத் தெய்வத்தை நாம் மறவோம்
எம் இதயத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைவதாக.

அன்பு மனைவி, பிள்ளைகள், மதியழகன்(சாரதி),
சூரியகுமார்(Holland), சாந்தகுமார்(Germany)
சந்திரகுமார், சாந்தி, லதா, உதயகுமார்,
கமல், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (சி 3933)

## ★ சிந்து மாகாணத்தில் வன்செயல்கள்:

# 4000 மக்கள் இடம்பெயர்வு;

# கராச்சியில் 30 பேர் சுட்டுக்கொலை!

[இஸ்லாமாபாத்]

**பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்செயல் காரணமாக நாலாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கராச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவமொன்றில் முப்பது பொது மக்கள் கொல்லப்பட்டனர்.**

பாதிக்கப்பட்ட மக்களில் பலர் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து சிந்து மாகாணத்தின் அயல் மாநிலங்களில் தஞ்சம்புகுந்த வண்ணமுள்ளனர்.

இங்கு நடைபெறும் வன்செயல் நிறுத்தப்படாவிட்டால் மேலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்படலாமென்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை கராச்சிப்பகுதியில் இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி வருவதாகவும் இவ்வாறு நடைபெற்ற சம்பவமொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் முப்பது பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டுவதற்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக ரோந்துநடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது நிலவிவரும் பதற்றநிலைபற்றி ஆராய்வதற்கு மாகாண அரசாங்கம் சகல கட்சிகளையும் அழைத்து கூட்டமொன்று நடத்தவுள்ளது. (து)

## முன்னாள் மத்திய அமைச்சருக்கு எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்திய ராஜ்ய சபைத் தலைவர் திரு. சங்கர்தயாள் சர்மாவை இழிவுபடுத்தும்வகையில் கருத்துக்களை வெளியிட்ட காரணமாக முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கே. கே. திவாரி சபையின்முன் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார். (அ)

## சீனாவில் பெண்புலி 4 குட்டிகளை ஈன்றது

(பீக்கிங்)

சீனாவில் மிருகக்காட்சிச்சாலையில் பெண்புலி ஒன்று நான்கு குட்டிகளை ஈன்றுள்ளது.

தற்சமயம் இரண்டுமாதம் நிறைந்துள்ள இந்தக் குட்டிகள் ஒவ்வொன்றும் எட்டுக்கிலோ எடைகொண்டது.

சென்ற வருடமும் இந்தப்புலி மூன்று குட்டிகளை ஈன்றது குறிப்பிடத்தக்கது. (து)

## "மருத்துவக் கல்லூரி டாக்டர்கள்

# ஏழைகளின் நல்வாழ்விற்காக

## கிராமத்தில் பணியாற்றவேண்டும்"

### முதல்வர் கருணாநிதி வேண்டுகோள்

[சென்னை]

"மருத்துவக் கல்லூரிகளில் படித்து முடித்தவர்கள் நகரங்களில் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு கிராமங்களில் தங்கி ஏழை மக்களின் நல்வாழ்விற்காகப்பணியாற்றவேண்டும்."

இவ்வாறு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்றுமுன்தினம் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற வெள்ளி விழாவில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது; அரசின் சார்பிலும் தனியார் துறையிலுமாக எத்தனை மருத்துவமனைகள் கட்டப்பட்டாலும் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஈடுகட்டும் வகையில் இன்னமும் போதுமான மருத்துவமனைகள் இல்லாமல் இருப்பது கலனத்தில் கொள்ளப்படவேண்டிய தொன்றாகும்.

மாநில மக்கள் நல்லாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி உட்பட பல பிரமுகர்கள் இவ்விழாவில் உரையாற்றினார்கள். (க)

## சென்னையில் சர்வதேச

# திரைப்பட விழா!

(சென்னை)

சர்வதேச திரைப்படவிழா 1991-ம் ஆண்டு ஜனவரிமாதம் சென்னையில் நடைபெறவுள்ளது.

இத் தகவலை மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. லெட்சுமிநாராயணன் சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

ஜனவரி 10ம் திகதி தொடக்கம் 20 திகதிவரை இவ்விழா நடைபெறும். விழாவில் ஐம்பது இந்தியத் திரைப படங்களும், நூற்றிக்கும் மேற்பட்ட வெளிநாட்டுத் திரைப்படங்களும் காண்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்: (து)

## கொலம்பியா வெள்ளப்பெருக்கில்

## 12 பேர் பலி; பலரைக் காணவில்லை!

[பகோட்டா]

கொலம்பியாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கினால் பன்னிரெண்டு பேர் இறந்துள்ளதுடன் பலர் காணமல் போய்விட்டதாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் வெள்ளப்பெருக்கினால் காணமல் போனவர்களைத் தேடும்பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது.

பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் இவ்வாறு காணமல்போய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இடங்களில் பெருமளவில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாக அரச செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. [க-து]

## ஆலய பரிபாலன சபை

(தென்மராட்சி)

கொடிகாமம் அலங்கார முருகமூர்த்தி கோவில் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்; மு. வைத்தீஸ்வரன் உப தலைவர்: வி. நடராசா, செயலாளர்: எஸ். எம். கமலநாதன், பொருளாளர்: தா; பாலசுப்பிரமணியம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக மூவர் தெரிவுசெய்யப்பட்டனர். (81)

## 10 கிலோ கிராம்

# போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது

(கன்னியாகுமரி)

கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான பத்து கிலோ கிராம் ஹீரோயின் போதைப் பொருள் போதைத்தடுப்புப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

இம் மாவட்டத்தில் இந்த அளவு தொகை ஹீரோயின் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## 5 வயது சிறுவன் ஞானியாகப் பிரகடனம்!

(டாக்கா)

கிழக்கு பங்களாதேஷில் ஐந்து வயதுப் பையன் ஒருவன் ஞானியாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளான்.

பத்து செ: மீற்றர் நீளமுடைய தாடியும், தோற்பட்டைவரை வளர்ந்திருக்கும் தலைமுடியும் இந்தச் சிறுவனை ஞானியாக்கக் காரணமாக இருந்தது என்று கூறப்படுகிறது. (து)

## பாஷையூர் கடற்றொழிலாளர்

# சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தமக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்து யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி ஊடாக, வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும், தொழில் அமைச்சருக்கும் மகஜர் அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"எமது மக்கள் ஆழ்கடல் செல்வதற்கு வசதியாக கரையாற்றில் இருந்து பாஷையூர் துறைமுகம்வரை உள்ளவாய்க்கால் ஆழமாக்கப்படுவதுடன் அணைக்கட்டுக்களும்புனரமைக்கப்படவேண்டும். அத்துடன் ஆழமாக்கப்படவேண்டும்.

"மீன்களைப் பாதுகாப்பாகவும், பழுதடையாமலும் வைப்பதற்கு குளிர் ஊட்டும் அறை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தல்.

"எமது கடற்றொழிலாள மக்களுக்கு வதிவிடங்கள் பற்றுக்குறைவாக இருப்பதால் கடல் ஏரிகளை அணைகட்டி நிரப்புவதுடன் அவர்கள் தங்குவதற்கு வீடுகளை அமைக்க ஆவன செய்து கொத்டுதல்.

"பல்லாண்டுகளாக சிறகு வலைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் ஆழ்கடல் தொழில் செய்வதற்கு வள்ளங்களையும், வலைகளையும், இயந்திரங்களையும் மானியமாகக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்." (வி)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம)

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது.

## சோவியத் யூனியனின் கடன்

# 400 கோடி டாலர்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் மொத்தக்கடன் நானூறு கோடி டாலர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் பிரதமர் நிக்கலாய் ரிஷ்கோவ் அண்மையில் பாராளுமன்றத்தில் பேசுகையில் சோவியத்நாட்டின் கடன் தொகை 34 மில்லியன் ரூபிள்களாகும் என்று தெரிவித்தார்.

சோவியத் யூனியன் ஏனைய விடயங்களைப்போல அதன்கடனையும் பரமரகசியமாக வைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

அண்மையில் வெளிநாடுகள் சோவியத் யூனியனுக்கு 82 மில்லியன் ரூபிள்கள் கடன் பட்டுள்ளன என்று சோவியத் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இதில் 80 வீதம் டாலர்களாக இல்லை என்றும் இவற்றில் பெரும்பகுதி திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீக்கிய தீவிரவாதிகளினால்

# இவ்வருடம் 1,200 பேர் பலி!

[புதுடில்லி]

சீக்கிய தீவிரவாதிகளினால் இவ்வருடம் மட்டும் 1,200 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் புதுடில்லியில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புக்கும் சீக்கிய தீவிரவாதிகளே காரணம் என்று புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. [க-து]

### மணிவாக்கு

ஒருவன் சரியென நினைப்பதை அச்சமின்றி தொடருவதே சிறந்த விதி.

—காந்தி மகான்

# நிவாரணக் கொடுப்பனவுகள் எங்கிருந்து வருகின்றன...? எவருக்குக்கிடைக்கவேண்டும்?

இலங்கையிலே இனப் பிரச்சனை ஆரம்பித்த கால கட்டத்திலிருந்து தமிழ் மக்கள் பல இழப்புக்களை எதிர் நோக்கி வந்துள்ளனர். வீடு வாசல்களை இழந்தும், உயிர்களை இழந்தும், அகதிகளாகியும் சொல்லொணுத் துயர் அடைந்து தவிக்கும மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது முக்கியம்என காலந்தாழ்த்திய போதும்அரசாங்கம் உணர்ந்துகொண்டதன் பிரதிபலிப்புத்தான் தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பு நடவடிக்கைகள். 1983 ஆடி 23ம் திகதியிலிருந்து இழப்புத் தொகைகள்வழங்கப்பட்டுவருகின்றன. இதன் பின்னர் பல வெளிநாடுகளும், அங்குள்ள ஸ்தாபனங்களும் அரசினூடாகவும்,வேறு பொது ஸ்தாபனங்களினூடாகவும்(Non-Government Organizations N.G O) உதவிகளை வழங்க முன்வந்தன.

உதவி வழங்கும் நாடுகளில் முக்கியமானவை யப்பான், பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, இந்தியா என்பனவாகும். மேலும் உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி, புனர்வாழ்வுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம்(U.N.H.C.R ) போன்ற ஸ்தாபனங்களும் நன்கொடைகளையும், கடனுதவிகளையும் அளித்து வருகின்றன. உலக வங்கியானது யாழ் மாவட்டத்திற்கு ஏறக்குறைய 200 மில்லியன் உதவியளித்துள்ளது.

### "ஐயை"

கிடைக்கும் உதவிகள்:

உயர்கல்வி, கல்விசார்ந்த புனரமைப்பு - பிரித்தானியா.

கால்நடைகளுக்கான உதவிகள் - மேற்கு ஜேர்மனி.

தொலைபேசி சீர்திருத்தம் - டென்மார்க்.

பாடசாலைத்தள பாடங்கள்— நோர்வே.

பாடசாலைகள் மீளமைப்புப்பும், திருத்த வேலைகளும் — ஆசிய அபிவிருத்தி வங்கி, வீதிகள் - உலகவங்கி.

அத்துடன் உலகவங்கி யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சில குறிப்பிட்ட இடங்களில் கட்டிட நிர்மாணப் புனரமைப்பு வேலைகளுக்காக உதவிகளை அளித்துள்ளது. அவை யாவன:

பருத்தித்துறை – 45 மில்லியன்
வல்வெட்டித்துறை - ,,
சாவகச்சேரி - 30 ,,
யாழ்ப்பாணம் – 80 ,,

மேலும் பாதிப்புக்குள்ளான தபார்கந்தோர்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் முதலியனவற்றைத் திருத்தியமைக்கவும் உலகவங்கி உதவியுள்ளது யாழ் செயலகத்தின் புனர் நிர்மாண வேலைகளுக்கும் உலக வங்கி உதவியுள்ளது. மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும்மீளவும்தொழில் வாய்ப்புக்காக U. N H.C.R உதவிகளை வழங்கி வருகிறது. இது இவர்களுக்குத் தொழிற் பயிற்சிகளையும் அளித்து வருகின்றது.

அடுத்து கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை கீழ்க்கண்டவாறு இதுவரை பதிவுசெய்யபபட்டுள்ளன.

(83 இலிருந்து 89 வரை)
உயிரிழந்தோர் - 3665
ஊனமுற்ருேர் – 1325

இப்படியாக இழப்புக்களை அடைந்தோரும் அதற்காக உதவி வழங்கும் நாடுகளும் இருக்கும்போது இந்த இழப்புக்களைப் புனரமைப்பதற்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## விவசாயக் கழகங்களும் ஆய்வு முயற்சிகளும்.....!

"விவசாய உற்பத்திப் பிரதேசத்தைப் பெருக்குவதற்கான ஆய்வுகளைச் செய்வதுடன் நவீனமுறை விவசாயத்தையும் எமது விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும். கூடிய விளைச்சல் தரும் நவீன முறைகளைக் கையாண்டால் குறைந்த பொருட்செலவிற் கூடிய விளைச்சலைப் பெறமுடியும்!"-இப்படி ஆலோசனை வழங்கியிருக்கிருர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர்.

கிராமிய ரீதியில் நிறுவப்பட்டுவரும் விவசாயக்கழக அங்குரார்ப்பண விழாவிற் கலந்துகொண்டு பேசியிருக்கிருர்.

விவசாயிகள் படும் கஷ்டங்களை உரிய இடங்களுக்கு எடுத்துக்கூறி வேண்டிய நிவாரணங்கள் பெற்றிட, ஒன்றுபட்ட குரலிற் கூறிட, கூட்டுமுயற்சி தேவை.

ஏற்கனவேயிருந்த கூட்டுறவு விவசாயச் சங்க முயற்சிகள் பல பகுதிகளிற் சோர்வடைந்துள்ளன. அமைச்சர் லலித் விவசாய அமைச்சராக இருந்த வேளையில் விவசாயச் சங்கங்களை உருவாக்குவதற்குத் தீவிர முயற்சி எடுத்திருந்தார்.

எமது பகுதியிலே சிற்றூரவைகள் மூலம் இத்தகைய விவசாயக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுவது விவசாயிகளைக் கைதூக்கிவிடப் பெரிதும் உதவும்.

விவசாயிகள் ஆண்டாண்டுகாலமாகக்கைக்கொண்டு வரும் விவசாய உத்திகளும் வழிமுறைகளும் தற்காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மீளாய்வு செய்யப்படவேண்டியவை.

அதேவேளை, நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பத்தின் விளைவாக உருவான புதிய மருந்து வகைகள், கிருமி நாசினிகள், உரவகைகள் ஆகியவற்றின் பாவனை பற்றியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பழையனவற்றை முற்றுமுழுதாக விட்டுவிடவோ, புதியனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளவோ வேண்டிய அவசியமில்லை.

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப எத்தகைய உத்திகளைக் கையாள வேண்டும்? இது ஆராய்ச்சிக்குரியது.

விவசாயப் பாடசாலைகள், ஆய்வு நிலையங்கள் இந்த விஷயத்திற் கூடிய இணைப்புகளை விவசாயிகளுடன் ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்திலே துறைபோகக் கற்று, ஆய்வுகளை மேற்கொண்டு பட்டத்தினைப் பெற்றுவிட கிளிநொச்சியிலே விவசாயபீடம் அமைந்து வருகின்றது.

இதேவேளை, இடைமட்ட விவசாய அறிவினைப் பெருக்க மாவட்டங்கள் தோறும் பாடசாலைகள் உருவாகி வருகின்றன.

வவுனியாவில் அமைந்துள்ள விவசாயப் பாடசாலை பல மாவட்டங்களிலுமுள்ள விவசாய மாணுக்கருக்கு இருவருட டிப்புளோமா விவசாயக் கற்கை நெறியை ஒழுங்கு செய்துள்ளது.

1990 / 92ஆம் ஆண்டிற்குரிய மாணுக்கர்களைச் சேர்ப்பதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்கள்.

விடுதிகளும், ஆய்வு கூடங்களும் அமைக்கப்பட்டுவருகின்றன. இப்பாடசாலை வெறும் கற்கைநெறிகளோடு நிற்காது வெளிக்கள ஆய்வுகளிலும் கூடுதலாக ஈடுபட வேண்டும்.

ஏற்கனவே உழுந்துச்செய்கை பற்றிய ஆய்வு முடியுந் தறுவாயில் உள்ளது. கிச்சிலிப் பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்பு ஆகியவற்றிற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் விவசாயக்கழகங்களின் விவசாயப் பிரச்சனைகளைக் கேட்டறிந்து தீர்வுகள் காண விவசாயப் பாடசாலைகளும், ஆய்வு நிலையங்களும் முன்வரவேண்டும்; இணைப்பு வேண்டும்.

★ நாளை உலக சூழல் தினம்

## பூகோள கூடுதல் உஷ்ணத்திற்கு சுற்றுடல்காரணமா?

சுவிடன் தலைநகரில் 230 வருடங்களுக்கில்லாத உஷ்ணம் 1989ல் உஷ்ணமானி காட்டியது. பிரான்ஸில், ஸ்பெயினில், இங்கிலாந்தில்,



அமெரிக்காவில் இதேபோன்று 1988-ல் உஷ்ணம் அதிகரித்தது. கோடை வெய்யிலில் காய்பவர்கள் இவ்வருட வெய்யிலில் வெந்தார்கள் எனக் கூறப்படுகின்றது. இப்படியான சீதோஷண நிலைக்குக் காரணமென்ன?

நாசா கொடாட் விண்வெளியாராட்சி அமைப்பின் தலைவர் யேம்ஸ் ஹன்சன் என்பவர் இவ்விளைவு பச்சைவீட்டுத் தாக்கம் (கிறீன் ஹவுஸ் தாக்கம்) என்கிருர். அப்படியாளுல் 'பச்சை வீட்டுத் தாக்கம்' என்ருல் என்ன?

சூரியன் பூமியை உஷ்ணமாக்கும்போது கீழ்ப்பவனத்திலுள்ள சில வாயுக்கள் பச்சை வீட்டிலுள்ள கண்ணுடி நிலத்திலிருந்து பிரதிவிம்பிக்கும் சூட்டில் ஒரு பகுதியைத் தான் உறுஞ்சிக்கொள்வது போல இந்தபபச்சை வீட்டு வாயுக்கள் என்று சொல்லப்படும் நீராவி கார்பன் ஈர் ஒட்சைட்டு மீதேன் இன்னும் மனிதனுல் உற்பத்தியாக்கும் குளோரோ புளூரோ கார்பன் முதலியன எங்கள் மண்ணில் உயிர் வாழக்கூடிய சூட்டை கவர்ந்து எங்கள் கோளத்தைச் சூடாக வைத்திருக்

(5-ம் பக்கம் பார்க்க)

# பலதும் பத்தும்

### 'கருகிய தளிர்கள்'

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்டிட...

பலர்...பல கோணங்களிலிருந்து தமது பங்களிப்பைச் செய்திருந்தார்கள்; செய்துவருகிருர்கள்.

சிலர்... தியாகத்தின் உச்சமாக... தமது உயிர்களையே தந்திருக்கிருர்கள்!

களத்திலே... கருகியிருக்கின்றன...சில தளிர்கள்! நெஞ்சை உருக்கவல்லன. அவர்களின் தியாகச் செயல்கள். 'உறின் உயிர் அஞ்சா மறவர்கள்' அவர்கள்.

அவர்களை — பலர் — பல்வேறு விதங்களிற் போற்றி வருகிருர்கள்!

அந்தவகையில்—வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணுக்கர்கள்— 'களத்திற் கருகிய கல்லூரித் தளிர்கள்' என்ற செம்மலரை வெளியிட்டிருக்கிருர்கள்.

ஒன்பது கருகிய தளிர்களின்—கல்விச் சிறப்புகள், விளையாட்டுச் சாதனைகள், போர்க்கள நினைவுகள் உட்படச் சிறுகுறிப்புகள் தரப்பட்டுள்ளன படங்களுடன்.

'புரந்தார் கண் நீர்மல்கச்' சென்றுவிட்ட இவர்களைப் பற்றிப் படிப்பவர்களின் உணர்ச்சிகள் கிளறப்படுகின்றன...கண்கள் குளமாகின்றன...!

வாணி

[இன்று காவலூர் கிழக்கு புனித அந்தோனியார் கோவில் கொடியேற்றம்]

### உன் புகழ் பாடுவேன்

பாரெல்லால் புகழ - தெருவெல்லாம் ஒலிக்க
புனிதா உன்புகழ் பாடுவேன்
பக்தர்கள் கோடி குறைதீர்க்கும் உந்தன்
திருநாமம் போற்றிடுவேன்
அந்தோனி எனும் நாமம் அடியோர்க்கு தஞ்சம்
அழுதோடி வந்தோர்க்கும் மஞ்சம்
தயைதேடி வந்தோர்க்கு வரம் தந்து காக்கும்
ஐயனின் புகழ்பாடவே.

—அருட்திரு. சா. கிருபானந்தன்

### இன்னுயிர்த் துணைநீயே கௌரீஸ்வரா!

ராகம் - கானடா தாளம் - ஆதி

பல்லவி

என்வழித் துணைநீயே கேதீஸ்வரா – என்தன்
இன்னுயிர்த் துணைநீயே கௌரீஸ்வரா - ஐயா
...(என்வ...)

அனுபல்லவி

பரிகளென நரிகள் மாறியதுன்ஞலே – கல்லும்
படகெனவே கடலில் மிதந்ததுமுன்ஞலே - செல்லும்
...(என்வ...)

சரணம்

வழித்துணை யெனவந்தார் காணேன்நான்-என்தன்
விழிததுணை யெனச்சொன்ஞர் காணேன்நான்-நல்ல
உயிர்த்துணை யெனநின்ருர் காணேன்நான்– வெல்லும்
உயர்துணை யெனச்சொன்ஞர் காணேன்நான்–என்றும்
...(என்வ...)

- முருகு.

(இன்று திருக்கேதீச்சரத்தில் 08ம் திருவிழா)

# வேலணை பொதுநூலகத்திற்கு 25,000 ரூபா நன்கொடை

(வேலணை)

வேலணையின் பிரதேச சபையின் பொதுநூலகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென இலங்கைஅரசாங்கம் இருபத்திஐயாயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நன்கொடைப் பணம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (75)

# நிவாரண கொடுப்பனவுகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் ஒழுங்குமுறை அவசியம். எனவே தான் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சானது நிவாரணஉதவிக் கொடுப்பனவுகளை பத்தாகப் பிரித்துள்ளது. இதில் முக்கியமான 7 வகைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிவுபடுத்தலாம்.

1. மீளக்குடியமர்த்தலுக்கான நிவாரணம்.
2. வீடு திருத்தலுக்கான நன்கொடையும் கடனுதவியும்.
3. உற்பத்தி முயற்சிக்கான நன்கொடையும் கடனுதவியும்
4. உடல் ஊனங்களுக்கான நஷ்டஈடு.
5. பாதிக்கப்பட்ட தொழிலகங்களுக்கான உதவியும் கடன் வசதியும்.
6. உயிரிழப்பிற்கான நஷ்டஈடு.
7. இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கான உதவியும், கடன்வசதியும்.

இவற்றில் மீளக்குடியமர்த்தல் நிவாரணத்தை யாழ். மாவட்டத்தின் 1,50,000குடும்பங்கள் பெற்றுள்ளன. இதுவரை 2000- ஐயும் பெருத மக்கள் பிரச்சனைகளை எழுப்பி வருகின்றனர். ஆனுல் இதற்கான விடைகள் அதிகாரிகள் மட்டத்தில் சொல்லப்படுகின்றன. அதாவது இந்த நிவாண உதவிகள் பெரும்பாலும் வெளிநாடுகளால் வழங்கப்பட்டு வருபவை. இவற்றை முழுவதுமாக விநியோகித்து முடித்தால் மட்டுமே, மேலும் தேவையான உதவிகளைச்சான்றுகளை காட்டிப்பெறமுடியும். எனவேதான் முதலில் ஒரு பிரிவினருக்கு நிவாரணம் வழங்கி அது முடிந்த பின்பு மிகுதிப்பேருக்கு விரைவில் கிடைக்க வசதி செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அடுத்து முக்கியமான இழப்பாக உயிரிழப்பு கருதப்படுகிறது. இதுவரை பதிவுசெய்யப்படாத அல்லது காணமல் போனவர்களையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 6000க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்கள் வன்செயல்களினுல் 1983இலிருந்து ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இவற்றினுல் 1983இலிருந்து ஏறக்குறைய 5000க்கும் மேலான இளம் பெண்கள் விதவைகள் ஆகியுள்ளனர். வீட்டுத்தலைவர் இறந்தால், அதற்கான இழப்புத் தொகை ரூ. 50,000/- அவர்களில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கும் ரூ. 5000/- வீதம் வழங்கப்படும். பராயமடையாதவர் இறந்தால் ரூ. 25,000/- வழங்கப்படும். இதுவரையில் தமது கணவன் அல்லது பிள்ளை உயிருடன்இருப்பது அல்லது இறந்தது கூடத் தெரியாமல் அல்லலுறும் தாய்மார் அல்லது மனைவிமாரும் உண்டு. தமது உண்மையான இழப்பிற்கான தொகையைப் பெறுவது எப்படி என்று கூடத்தெரியாத அப்பாவி மக்களும் இங்கு உள்ளனர். மேலும் உடல் ஊனமுற்றோருககு ரூ. 25,000 வழங்கப்படுகிறது. இது எந்த வகையில் ஒருவரின் முழுக் குடும்ப வருமானத்திற்கும் ஈடுகட்டுகிறது என்பது கேள்விக்குறியே.

பொய்யான அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்து மோசடிசெய்பவர்களும், நிவாரணம் பெறுவதாகக் கூறப்படுகிறது. பாமர மக்கள் தமது இழப்புகளை ஈடுசெய்யத் தெரியாத-செய்யமுடியாத- நிலையில் அல்லலுறுகின்றனர். 'அரசாங்கப்பணம்தானே சும்மாயிருக்க வருகிறது! ஏன் அதை விடவேண்டும்' — என்று நினைத்து விடாப்பிடியாக நின்று, எந்தவிதமான அத்தாட்சிகளையும் சமர்ப்பித்துப் பணத்தை எப்படியும் பெற்றுவிடத்துடிக்கும் சாமர்த்தியசாலிகளும் இங்குள்ளனர். உதாரணமாக விவசாய உற்பத்திக்கான நன்கொடை ரூ. 4000 ஐயும் பெறுபவர்களில் பெரும்பாலானேர் காணிச் சொந்தக்காரர்களே. இவர்களது காணியில் பயிர் செய்து நட்டப்பட்ட ஏழைகள் இதனுல் எதுவித நன்மையும் அடைவதில்லை.

இப்படியானஒருநிலைமையை மாற்றி உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் போய்ச்சேர, அடிமட்ட மக்களிடையே பழகும் கிராமசேவையாளர்களே முக்கிய பங்கினை ஆற்ற வேண்டும். கிராம மட்டத்தில் சகல வீடுகளையும், இழப்புக்களையும் நேரில்சென்று அவர்கள் பார்வையிட்டு உண்மையான தகவல்களை உதவி அரசாங்க அதிபருக்குத் தரவேண்டும். அரசினதும், நலன்புரியும் வெளிநாட்டு ஸ்தாபனங்களினதும் உதவிகள் வீணே போகாது தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள்எடுக்க இதுவே உரிய வழியாகும்.

## பிரித்தானிய தூதுவராலய செயலாளர் மட்டு.விஜயம்

(மட்டக்களப்பு)

இரண்டுநாள் .உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரித்தானிய தூதுவராலயத்தின் 3வது செயலாளரான திரு. ஏ. ஜே. எச். கொவெல் கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்பு தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கம், புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் திரு. எம். எஸ். ஐரேனியஸ், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். ஜெயராம் குடிசைச் கைத்தொழில் உதவிப்பணிப்பாளர் திரு. பூ. குழந்தைகுமரன், கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் எஸ். சந்தானம் ஆகியோரை சந்தித்தும் பேசினுர். (121)

## தமிழில் அலுவல்கள்

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் அரச கரும மொழிச்சட்டத்தை செயல் படுத்தும் முகமாக, அண்மையில் மன்னுர் கச்சேரியில் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தலைமையில், மாவட்ட உயர்தர அதிகாரிகளின் மாநாடு இடம் பெற்றது.

இதற்கு கொழும்பு அரச கருமமொழித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. ட: சிவராஜசிங்கம் கலந்து கொண்டு விளக்கவுரை வழங்கினுர். எல்லா அலுவல்களும் முடிந்தவரை தமிழில் செயல்பட வேண்டுமென மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. மகாநாட்டை தலைமைப்பீட உ. அ. அதிபர் எஸ். எம். குருஸ் நெறிப்படுத்தினுர்.

# "சுயநலத்தை ஒதுக்கிவிட்டு போராட்டக் களத்திற்கு வாருங்கள்"

— வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)


''போராட்டம் என்பது ஒரு சில இளைஞர்களுக்கு மட்டும் உரியதல்ல: சிறுவர் முதல் முதியோர்வரை தமது சுயநலன்களை சிறிதுகாலம் ஒதுக்கிவைத்துவிட்டு, எம்மோடு இணைந்து போராடினுல்'ஈழம்' வெகுதூரத்தில் இல்லை.''

இவ்வாறு உடுப்பிட்டிப் பிரதேசம், இமையாணன் எனும் கிராமத்தில் நடைபெற்ற மேஜர் சலாமின் இரண்டாவது நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கவிஞரும், விடுதலைப் புலிகளின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவருமான திரு மு.வே. யோ. வாஞ்சிநாதன் பேசுகையில் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது;

''ஒரு சில இளைஞர்கள் 'தமிழ் ஈழம்' பெற்றுத்தருவார்கள்...நாம் எமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம் அல்லது வீட்டில் வைத்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு நல்ல வேலைகளைப் பெற்றுக்கொடுக்கலாம் என்ற கனவுகளில்தான் இன்னும் சிலபெற்றேர் மிதக்கிறுர்கள் இந்தநிலை மாறவேண்டும். இது நமதுமண். இதை நமது பிள்ளைகள் எல்லோருமே போராடிப் பெறவேண்டும் என்று ஒட்டுமொத்தமாக எல்லாப் பெற்றோர்களும் என்று நினைக்கிறுர்களோ அன்றுதான் இம்மண் விடிவு பெறும். சிறிலங்கா அரசு எம்முடன்மோதி ஏற்கனவே சூடு கண்டிருக்கிறது. 'சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது' என்ற பழமொழியையும் அது புரிந்து வைத்திருக்கிறது. ஆகவே மீண்டும் ஒருமுறை எம்முடன் மோதுவதைத் தவிர்த்து, பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில், உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து, எமது தமிழ் பேசும் மக்களின் அடிப்படை பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க சிறிலங்காஅரசு முன்வர வேண்டும். இல்லையேல் இம்மண்ணில் போர் மேகங்கள் ஒய்வதற்கு வெகுகாலம் பிடிக்கும்''

இக் கூட்டத்தில், திருவாளர்கள் அரசன். செங்கதிர், குணம் உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் பலரும் உரையாற்றினுர்கள்.



ஈழநாடு காரியாலத்தில் பத்திரிகையாளர் பயிற்சி நெறியினை, பழம்பெரும் பத்திரிகையாளரும் 'ஈழநாதம்' ஆசிரியருமான திரு. எஸ். எம். கோபாலரத்தினம் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகிறுர்.

## நாளை உலக

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

கால்நடை வளர்ப்பினுலும் சேதனப்பொருட்கள் அழுகுவதாலும் உற்பத்தியாகின்றது மீதேன் இனி விறகு எண்ணெய் முதலியன எரிவதாலும், பிராணிகள் மூச்சுவிடுவதாலும் கார்பன் ஈர் ஒட்சைட் உற்பத்தியாகின்றது அடுத்த குளோறுேரு புளுறேரு கார்பன் குளிர்சாதனப் பெட்டிகள் குளிரூட்டிகள் தெளிகருவிகள் மூலம் உற்பத்தியாகின்றது.

இந்தப்பச்சை வீட்டு வாயுக்கள் எனப்படுவன மிதமிஞ்சி ஆகாயத்திற் செறிவுற்றுல் அதிக உஷ்ணத்தை கிரகிக்க ஏதுவாகவிருக்கும். உதாரணமாக சுக்கிரன் என்னும் கிரகத்தை எடுத்துக்கொண்டால் அதில் பூமியிலும் பார்க்க 60000 மடங்கு கூடுதல் கார்பன் ஈர் ஒக்சைட் செறிந்திருக்கிறது. எனவே, அக்கிரகத்தின் உஷ்ணம் 800 பாகை பரனேட்டாக உயர்ந்துள்ளது. ஆனுல் இந்தப் பச்சை வீட்டு வாயுக்கள் மிகக் குறைந்தாலோ அல்லது இல்லாமலிருந்தாலோ உஷ்ணம் சைபர் பாகை செல்சியஸ் அல்லது உறைபணிக்குக் கீழ்ப்பட்ட உஷ்ணத்தை அடைந்துவிடும். எனவே பூகோளத்தில் பச்சை வீட்டு வாயுக்கள் செறிவுகூடிக் கொண்டுபோவதால் அடுத்த 100 வருடத்தில் 9 பாகை பரனேட் உஷ்ணம் கூடுவதற்கு ஏதுவாக இருக்கும்.

இன்னும் சூரியனிலிருந்து வரும் அல்ட்ருவைலற் கதிர்கள் தோல் புற்றுநோயை ஏற்படுத்தாமல் இவற்றை தடுத்து நிறுத்தும் ஓசோன் மண்டலத்தில் பொத்தல் ஏற்படுவதற்கும் இந்தப் பச்சை வீட்டுத் தாக்கத்திற்கும் தொடர்பு உண்டா? ஓசோன் பொத்தல்கள் புரட்டாதி தொடக்கம் கார்த்திகை வரை அதுவும் தென் துருவப் பகுதிகளிற்தான் ஏற்படுகின்றது. இவை இயற்கை நிலைகளினுல் பின் சரி செய்யப்பட்டுவிடுகின்றது. ஓசோன் இயற்கையால்உற்பத்தியாகுவதும் அழிக்கப்படுவதுமாக இருகின்றது.

உதாரணமாக பூகம்பங்கள் எரிமலைகளினுல் ஏராளமாக குளோறின் வாயுவை ஆகாயத்திற் கக்குகின்றது. இந்தக் குளோறின் ஓசோன் மூலங்களை அழித்துவிடுகின்றது. இதைவிட மனிதனுல் உற்பத்தியாகும் குளோறேரு புளோறேரு கார்பனும் குளோறின் அணுக்களை விடுவித்து மேல் மண்டலத்திலுள்ள ஓசோன் படையில் பொத்தல்களை ஏற்படுத்துகின்றது.

காடுகளை அழித்தால் பச்சை வீட்டு வாயுக்களி தாக்கம் மோசமாகுமா? மரங்கள் செடிகள் வளர்வதினுல் ஆகாயத்திலுள்ள காபன் ஈர் ஒட்சைட் உறிஞ்சப்படுகிறது. மரங்களை அழித்து எரிப்பதனுல் கார்பன் ஈர் ஒக்சைட் அதிகரிக்கும் என்ற மனப்பயம் மக்களிடையே உருவாகின்றது. எனவே உலகிலுள்ள லட்சக்கணகான நிலப்பரப்பில் மரங்களை வளர்க்கவேண்டும். சீதோஷ்ண நிலையைச் சமப்படுத்தி உலகில் மக்கள் நல்லவண்ணம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமேயானுல் நாம் ஒவ்வொருவரும் இதில் அக்கறைகொண்டு, பங்கெடுத்து நம எதிர்காலச் சந்ததியின் நலன்கருதி இயன்றளவு மரங்களை நாட்டி வளர்க்க வேண்டும்.

தொகுப்பு: க. கனகராசா

# இந்துசமய போட்டி முடிவு

(பருத்தித்துறை)

இந்துசமய இந்து கலாசார அமைச்சால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இந்து சமய பேச்சு, கட்டுரை, பண்ணிசைப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடங்களைத் தட்டிக்கொண்ட ஒன்பது மாணவர்களுக்கு உல்லாசப்பயணத்துறை, கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தங்கப்பதக்கங்களை அணிவித்துக்கௌரவித்தார்.

### பண்ணிசை

மேற்பிரிவு செல்வி. எஸ் சிவரதி (தெல்லிப்பழை), மத்தியபிரிவு செல்வி என். ஜெயபாரதி (பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி பருத்தித்துறை) கீழ்ப்பிரிவு செல்வி ம. லதாங்கி (சைவ வளர்ச்சிக்கழகம், மகாஜனுக் கல்லூரி தெல்லிப்பழை)

### கட்டுரைப்போட்டி

மேற்பிரிவு செல்வி ஏ: வானதி (சைவவளர்ச்சிக்கழகம் தெல்லிப்பழை) (மத்திய பிரிவு செல்வி கே. கௌசிதகி (சிவநெறிக்கழகம் கீரிமலை) கீழ்ப்பிரிவு - செல்வன் என். பகேஸ்வரன் (சைவவளர்ச்சிக் கழகம் தெல்லிப்பழை)

### பேச்சுப்போட்டி

மேற்பிரிவு - செல்வி ஜெ. சகில்லா இரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் வவுனியா) மத்திய பிரிவு செல்வன் சதீஸ் பாலமுரளி (தெல்லிப்பழை) கீழ்ப்பிரிவு செல்வி. கே. மதுமையாள் (வித்தியாலய வீதி, திருகோணமலை)

இப்பரிசளிப்பு விழா பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இந்து சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர்திருமதி இராஜ மனேகரி புலேந்திரன் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, இந்துசமய இந்து கலாசார திணைக்கள பதில்பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

மாவட்ட ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் வைபவம், கொட்டாஞ்சேனை விவேகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்து சமய இந்துகலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ், இந்துசமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சுச் செயலாளர் திரு. கே. வி. லோகேஸ்வரன், பதில் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகியோர் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

இந்து சமய, இந்து கலாசார அமைச்சினுல் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட முதலாவது இந்துசமயப் போட்டி இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்து சமயப் போட்டி

(7-ம் பக்கம் பார்க்க)

# "முதியோரிடையே நிலவும் விரக்தியை அகற்ற முதியோர் கல்வித் திட்டம் உதவும்"

(யாழ்ப்பாணம்)

''பின்தங்கிய கிராமங்களிலே வாழ்கின்ற முதியோர்களிடையே நிலவும், அறியாமை, இயலாமை, மூட நம்பிக்கை போன்றவற்றை அகற்றி அவர்களிடையேநல்ல மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்'' என்று அறவழிப் போராட்டக்குழு நிர்வாக இயக்குனர் திரு.க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

கைதடி கள்ளிநகரில் முதியோர் கல்வித் திட்டத்தை ஆரம்பித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

சுமார் இருபத்தைந்து வயோதிபர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''அண்மைக்கால நிவாரண வழங்கலின் போது எத்தனையோ முதியவர்கள் தமது சொந்தக் கையெழுத்தினைப் போடமுடியாது கைக்குத்து வைத்தமையை நாம் நேரில் பார்த்தது மட்டுமன்றி அவர்களிடையேயுள்ள அறியாமை காரணமாக படித்தவர்கள் பலர் அவர்களை ஏமாற்றி பணம்பறித்தசம்பவங்களையும் நாம் அறிவோம்.''

இந்நிலை இனிமேலும் எமது பெரியவர்களுக்கு ஏற்படக்கூடாது என்ற காரணத்திற்காகவும் இந்த முதியோர் கல்வித்திட்டத்தை கிராமங்களிலே நடத்துவதற்கு எமது ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது''.

''பல வயோதிபர்கள் தமது உறவினர்களிடமிருந்துஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில்விரக்தியுடன் வாழ்வதனை நமது கிராமங்களிலே அவதானிக்கிறோம். இதுபோலவே நகர்ப்புறங்களில் உள்ள வயோதிபர்கள் வயோதிபர் சாலைகளில் முடங்கியிருப்பதனையும் நாம் பார்த்திருக்கிறோம்''

இந்த நிலையில் முதியோர்களின் வாழ்வு விரக்திநிறைந்த ஒருவாழ்வாகத்தானிருக்கிறது ஆகவே இதனை முதியவர்களும் இந்தச் சமுதாயத்தின் முக்கிய அங்கத்தவர்கள் என்பதனை நிலைநாட்டுவோம்.''

''அரசியல், உலகவியல்கள், சமயம் உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர்வதற்கு முதியோர்களுக்கு இந்தக் கல்வித்திட்டம் உதவும்.''

முதியோர் கல்வித்திட்டத்திற்காக மூன்று கிராமங்கள் எமது ஸ்தாபனத்தினால்தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இருபத்தைந்து கிராமங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்.''

இவ் ஆரம்பநிகழ்ச்சியில் அறவழிப்போராட்டக் குழுத்தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன், இயக்குநர் திருமதி கனகம்மா தங்கராஜா, பொ. கந்தையா ஆகியோர் உரையாற்றினர்கள்.

செல்வி கேதீஸ்வரி செல்வராசா நன்றியுரை வழங்கினார்.

# 'இந்து மகள்' சஞ்சிகை இன்று வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான ''இந்து மகள்'' சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை கல்லூரிமண்டபத்தில் அதிபர் திருமதி எல். குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சஞ்சிகை வெளியீட்டு விழாவிலே வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பீ. வீரபத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள வருகிறார்.

யாழ். பல்கலைக்கழக விலங்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் யாழ். கல்வித்திணைக்கள வர்த்தகக்கல்வியதிகாரி திரு. எஸ் சிவராஜா, வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலக கல்வியதிகாரி திரு.எஸ். செல்லத்துரை, புலோலி கொத்தணி அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன், பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு. எஸ். பி பாலசிங்கம் இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். கனகசுந்தரம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

''இந்துமகள்'' சஞ்சிகையின் முதலாவது பிரதியை இளைப்பாறிய அதிபர் திருமதி சுப்பிரமணியத்திடமிருந்து யதார்த்தா கலை இலக்கிய வட்டத் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் பெற்றுக் கொள்வார். 'சஞ்சிகை ஆசிரியர் திரு.எம்.என். யோகராஜா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (52)

## 9-ம் ஆண்டு மாணவருக்கு தொழிற்கல்வி கட்டாயமாக்கப்படும்

(கொழும்பு)

ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கு தொழிற்கல்வி கட்டாய பாடமாக்கப்படும் என்று, கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர (சாதாரண) வகுப்புகளில் மாணவர்கள்பாடத்தைவிணுக்குவதை தடுத்த இது உதவும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

80 சதவீதமான மாணவர்கள் ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு பின்னர்மேற்படிப்பைத் தொடருவதில்லை என்றும் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பதன் மூலம் வேலைத் திறன்களைப் பெற்று சுயவேலை வாய்ப்புக்களை பெறும் வசதி ஏற்படும் என்றும்தெரிவித்துள்ளார். (அ)

## நெடுந்தீவு படகுக் கட்டணம் விரைவில் அதிகரிக்கலாம்!

(வேலணை)

நெடுந்தீவுக்குச் செல்லும் மோட்டார் படகுச்சேவை கட்டணம் விரைவில் அதிகரிக்கப்படலாம் என அறியப்படுகின்றது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நெடுந்தீவுக்கு செல்வதற்கான ஒரு பிரயாணியின் பிரயாணக் கட்டணம் தற்பொழுது ஐம்பது சதம் மட்டுமே அறவிடப்பட்டு வருகின்றது.

இக்கட்டண வசூல் பலவருடங்களாக அதிகரிக்கப்படவில்லை எனவும் தற்போதைய செலவுகளுக்கு இந்த ஐம்பது சத பிரயாணக்கட்டணம். ஈடு கொடுக்காது என்ற காரணங்களாலேயே இக்கட்டணத்தை உயர்த்துவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

## நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலக உத்தியோகத்தர் திரு. கே. ஜீ அல்போன்ஸ் வடமராட்சிப் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்தவராவார். [52]

# "ஏனைய இயக்கங்களுடன் அரசு பேசுவது குறித்து நாங்கள் சந்தேகப்படவேண்டியுள்ளது'

(மட்டக்களப்பு)

''இலங்கை அரசு ஏனைய இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து நாம் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. அரசின் இந்தப் போக்கு கண்டிக்கத்தக்க தொன்றாகும். இருப்பினும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். மேலும் நாம் அமைதியை விரும்பாதவர்கள் அல்ல என்பதையும் உணர்த்துவதே எமது நோக்கமாகும்'' என்று விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதி கருணா தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெபர் அரங்கில் நடைபெற்ற விளையாட்டுத்துறை அமைச்சின் மாவட்ட விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டுஉரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இப்போது மட்டக்களப்பில் பூரண அமைதி நிலவுகிறது இந்த அமைதி ஏற்படுவதற்கான காரணகர்த்தாக்கள் யார் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அது எமது இயக்கத்தினரே என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது.

''விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உயிர்நீத்த 1400 போராளிகளின் உயிர்த்தியாகமே இதற்குக் காரணமாகும்''

இவ்விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு இ. யோகநாதன் உட்படப் பலர் உரையாற்றினர். (121)

## ஒவ்வொரு வருடமும் 130 ஆயிரம் மாணவர்கள் பாடசாலையிலிருந்து விலகுகிறார்கள்

(திருகோணமலை)

''இலங்கையில் நூற்றி முப்பதாயிரம் பாடசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகுகின்றனர். இதில் முப்பதாயிரம் பிள்ளைகள் வடகீழ் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைப் பேட்டிகண்டபோது தமக்குப் பாடசாலையில் வாழ்க்கையைக்கொண்டு நடாத்துவதற்கு ஏற்ற செய்திறன் ஆற்றல்கள் தமக்குத் தரப்படவில்லை என்று கூறினார்கள்'' என்று வடகிழக்கு மாகாண சபை இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி சிரோன்மணி ராஜரத்தினம் தெரிவித்தார்.

திருகோணமலையில் முறைசாராக் கல்விப்பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி வகுப்பில் பிரதமஅதிதியாக்கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''இன்று ஒவ்வொரு மாணவர்களும் பயன்படுத்தக் கூடியதாகக் கல்விமுறை அமைக்கப்பட்டிருக்கிறது. வாழ்க்கைக்கு ஏற்றதாகச் சூழலையும், சூழலுக்கு ஏற்றதாகவே வாழ்க்கையை இன்றையஏழாம், எட்டாம் ஆண்டு மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள்'' என்றார். (103)

## மன்னாரில் போக்குவரத்துச் சேவைக்கு பத்து புதிய பஸ் வண்டிகள்!

(மன்னார்)

மன்னார் பகுதியில் போக்குவரத்துச் சேவைக்கென பத்து புதிய பஸ்கள் ஈடுபடுத்தப்பட உள்ளது.

மன்னார் மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் குறித்து விடுதலைப் புலிகள் இ. போ. ச. சாலை முகாமையாளருடனும், அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொண்டு பஸ் சேவை அதிகரிக்க ஆவன செய்யுமாறு கேட்டுகொண்டனர்.

புலிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மன்னார் அரசாங்க அதிபர் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு பத்துப் புதிய பஸ்களையும், உதிரிப் பாகங்களையும் பெற்று போக்குவரத்துச் சேவையைச் சீராக்குவதென மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இ. போ. ச. பஸ் சேவை இரவு பத்து மணி வரை நடைபெறவேண்டுமென மன்னார் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. லக்ஸ்மன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். [85]

## 1-ம் ஆண்டில் சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

''அடுத்த வருடம் முதலாம் ஆண்டுக்குப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட இருக்கிறது. பாடசாலைகள் இதற்கான திகதியைப் பகிரங்கமாக அறிவிப்பதோடு மாணவர்களின் திறமைகளைப் பெற்றோர்கள் முன்னிலையில் ஒளிவு மறைவின்றி வெளியிடப்படவேண்டும் என்று கல்வியமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

கல்வியமைச்சில் நடைபெற்ற பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தெரிவுபற்றி ஆட்சேபனைகள் இருப்பின் ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்கு முன் மேன்முறையீடு செய்யப்படல் வேண்டும்.''

''ஆண்டு ஆறுக்கான அனுமதிப் பரீட்சை இனிமேல் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படமாட்டாது. அகில இலங்கை ரீதியில் புலமைப் பரீட்சையில் சித்தியடைவோர் தொகை இருபத்தையாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் புலமைப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று அவர் மேலும் கொன்னார். (ம)

## முஸ்லிம் சமய கலாசார அலுவலர் பதவி

(மானிப்பாய்)

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் சமய கலாசார அலுவலர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் 1990 ஜூன் 4ந் திகதியன்று 21 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை 1990 ஜூன் மாதம் 4ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சுற்றாடல் தின விழா

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் தின விழா நாளை யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் அதிபர் வண. பிதா ஜி. ஏ. பிரான்சிஸ் யோசவ் தலைமையில் நடைபெறும்.

கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன், திரு. வி. குகாதரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ஏ. எம். ரி. சவரிமுத்து, யாழ். பிரிவு கொத்தணி அதிபாகள் சங்கத் தலைவர் திரு. சி. கே. எஸ். குகதாசன் ஆகியோர் உரையாற்றுவர்.

இவ்விழாவில் சுவரொட்டிப் போட்டி, வில்லுப்பாட்டு, சிறுநாடகம் ஆகியவையும் இடம்பெறும். (153)

## ஜப்பான் 21 கோடி ரூபா உதவி

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு மீண்டும்21 கோடி 40லட்சம் ரூபா பெறுமதியான தொழில்நுட்ப உதவியை வழங்கியுள்ளது. இது சம்பந்தமான உடன்படிக்கை நேற்று கொழும்பில் கைச்சாத்தானது.

விக்ரோறியா பாலத்துக்கு பதிலாக புதியபாலமொன்றை அமைக்க யப்பானிய அரசாங்கம் மூன்றாவது தடவையாக இவ்உதவியை வழங்கியுள்ளது. (அ)

## எதிர் அணியின் பலவீனத்தை
# தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதில்
# உருகுவே கோஷ்டி சூரப் புலிகள்

1930ம் ஆண்டு முதலாவது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடாத்திய பெருமை உருகுவே நாட்டையே சாரும்.

அதேபோட்டியில் உருகுவேயே சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது மற்றுமொரு சாதனையாகும்.

(10)

தென்னமரிக்கநாட்டு உதைபந்தாட்டக் கோஷ்டிகளான பிரேஸில், ஆர்ஜன்ரீனா, உருகுவே இம்மூன்று நாடுகளும், உதைபந்தாட்டப் போட்டிகளில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களாகக் கணக்குப் போடமுடியாது. இம்மூன்று கோஷ்டிகளிடமும், தனிப்பட்ட திறமைகள் இருக்கத்தான் செய்கிறது.

ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை, மனஉறுதியுடன் மைதானத்தில் வேகமாகச் செயல்படக்கூடியவர்கள், உருகுவே நாட்டு வீரர்கள் எனப் பாராட்டுப் பெற்றவர்கள், ''எதிரணியினர் சோர்வடையும் நேரத்தை தமக்குச்சாதகமாகப் பயன்படுத்துவதில் உருகுவே வீரர்கள் சூரப்புலிகள். அவர்களின் திறமைகளை நாம் மிக எளிதில் கணக்குப்போட முடியாது. ஜூன் 13ம் திகதி நாம் மிக சுறுசுறுப்பாக இயங்குவோம்'' எனஸ்பெயின் நாட்டின் உதைபந்தாட்டக் கோஷ்டியின் பயிற்சியாளர் திரு. லூயிஸ் ஸறஸ் தெரிவித்தார். ஜூன் 13ம் திகதி உருகுவேயும் ஸ்பெயினும் முதலாவது போட்டியில் சந்திக்கின்றன.

2-வது உலகப்போரின்பின்பு 1950ம் ஆண்டு பிரேஸிலில் நடைபெற்ற 4வது உலகப் போட்டியின் இறுதியாட்டத்தில், பிரேஸிலும் உருகுவேயும் மோதின. இப்போட்டியில் பிரேஸில் முதலில் ஒரு கோல் போட்டு முன்னணியில் நின்றது. ஆட்டம் முடிவடைவதற்கு 8 நிமிடங்கள்இருந்தன. வெற்றி நமக்கே என்ற தோரணையில் பிரேஸில் விளையாடியாது. எதிரணியினர், வெற்றிக் களிப்பில் சோர்வடைந்து விளையாடுவதை அவதானித்த உருகுவே வீரர்கள், மின்னல் வேகத்தில் எதிரிகள்மேல் தாக்குதல்களைத் தொடுத்து, அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு வெற்றி வாகை சூடினர்.

1970ம் ஆண்டும் உலக போட்டியில் 4-வது இடத்தைப்பெற்றது. 1962. 1966, 1974, 1986ம் ஆண்டுகளில் உலக கிண்ணப் போட்டிகது விளையாடத் தகுதி பெற்றது.




உருகுவே, இதுவரை முதல்தரப் போட்டிகள் 33இல்பங்குபற்றி, 14 போட்டிகளில் வெற்றியும், 12 போட்டிகளில் தோல்வியும், 7 போட்டிகளை சமனுக்கியும் மொத்தம் 35 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

உலக கிண்ணத்தை இதுவரை கைப்பற்றியநாடுகளான பிரேஸில், இத்தாலி, ஆர்ஜன்ரீனா, மே.ஜேர்மனி, உருகுவே, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தற்போதைய திறமைகளைப் பற்றி இதுவரை ஆராய்ந்தோம்.

மற்றைய 18 நாடுகளின் திறமைகளையும், தற்போது வரை அவர்கள் ஏற்படுத்திய சாதனைகளையும் மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

நமது விளையாட்டு நிருபர்
'தேவா'

இதே பாணியில்தான் இம்முறையும் உருகுவே செயல்படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றுர்கள். இளம் வீரர்களைக் கொண்ட உருகுவே, இம்முறை மைதானத்தில் சளைக்காமல் விளையாடக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### சாதனைகள்

உருகுவே 1930ம் ஆண்டும், 1950ம் ஆண்டும் உலக கிண்ணத்தை வென்றது. 1954ம்,

## இராசி பலன்

திங்கட்கிழமை

04 - 06 - 1990

மேடம்: கௌரவம், வாகன சுகம், உதவிசெய்தல், மனக் குழப்பம்.

இடபம்: அரசியல் தாக்கம், சுகவாழ்வு, இன சன வரவு. எதிர்ப்பு.

மிதுனம்: பயந்தநிலை, அரச, எதிர்ப்பு, உறவினர் உதவி, ஆராய்ச்சி.

கடகம்: கடின உழைப்பு, நற்சிந்தனை, இடமாற்றம்.

சிங்கம்: வீண் யோசனை, புண்ணிய காரியச் செலவு, உதவிகள்.

கன்னி: நற்சிந்தனை, இடமாற்றம், வேண்டாத நட்பு, காரியக்கேடு.

துலாம்: வாகன சுகம், தந்திரப்போக்கு, கற்பனை, வீண் செலவு.

விருச்சிகம்: பொய் பேசுதல் தர்க்கம், குடும்பசுகம், செலவு.

தனுசு: வைத்தியச் செலவு, சமாதானம். தூரத்துச்செய்தி.

மகரம்: உற்சாகம் நீசர் நேசம், பிரயாணம், கடன்.

கும்பம்: சாஸ்திர விருப்பு, அவதி, யோசனை, பிடிவாதம்

மீனம்: நற்சிந்தனை, பணவரவு, நிதானம், தூரத்துச் செய்தி.

இ. மகாதேவா

## இப்படியும் நடக்கிறது

இலங்கை சட்டக்கல்லூரி மாணவர் மன்றக் கூட்டத்தில், முன்னுள் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த வாரம் சிறப்புரையாற்றியுள்ளார்.

அவர் எடுத்துக்கொண்ட பொருளின் தலைப்பு: ''இலங்கையின் சுதந்திரம், ஒருமைப்பாடு, பிராந்திய சுயாதிபத்தியம்.''

''நான் ஓர் அஹிம்சைவாதி: அஹிம்சை வாதியாக வாழ விரும்புகிறீர்களா? என்னைப் பின்பற்றுங்கள்'' என்று, சட்ட மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார் முன்னுள் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன.

உங்கள் சிந்தனைக்கு சில 'துளி'கள்.

1983 ஜூலையில் தமிழர்களின் உயிரும், உடைமைகளும் தீக்கிரையானதே! இது யார் ஆட்சியில்?

1987-ல் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' கட்டவிழ்த்து விடப்பட்டதே! இது யார் தலைமையில்?

1987-ல் அமைதிப்போர்வையில் இந்தியப்படை ஊடுருவி, தமிழ்ப் பகுதிகளில் அங்குமிங்குமாக தமிழினத்தை வேரறுத்த அந்தக் கொடூரம் நடந்ததே! யார் ஆட்சியில்?

1981 மே-ஜூன் மாதங்களில் 'ஈழநாடு' எரிந்தது! யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டது! இவை நடந்தது எந்த ஆட்சியில்?

சிறிலங்கா படையினரின் குண்டு வீச்சுக்கும், 'ஷெல்' அடிகளுக்கும்; இதனைத்தொடர்ந்து இந்தியப் படையினரின் பாரிய-தூரத்து 'ஷெல்' அடிகளுக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் தமிழர்கள் துடி துடித்து மாண்டனரே! யார் ஆட்சியில்?

''போர் என்றுல் போர்; சமாதானம் என்றுல் சமாதானம்'' என்று சூளுரைக்கப்பட்டதே! யார் ஆட்சியில்?

நல்ல காலம் ... மகாத்மா காந்தியும், மார்ட்டின் லூதர் கிங்கும் இன்று உயிருடன் இல்லை!

'ஊடுருவி

## தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி

(நாவற்குழி)

தொலைக்கல்வி மூலம் ஆசிரிய பயிற்சிபெற தாமதமாக விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதவிண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10ம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ள யாழ். மாவட்ட தொலைக்கல்வி மத்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொலைக்கல்விமூலம் பயிற்சி பெற விரும்பும் (இதுவரை விண்ணப்பிக்காத) ஆசிரியர்கள் இம்மாதம் 9-ம் திகதி காலை வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்வி அலுவலகத்தில் நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், வர்த்தமானிப் பத்திரிகை தாமதமாக யாழ். வந்ததே இந்தச்சலுகைக்கானகாரணம் என்றும் யாழ். மாவட்ட தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார்.

90-92ம் ஆண்டு கற்கைநெறிக்கான இந்த நேர்முகப் பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியவர்கள் தோற்றத் தேவையில்லை எனவும் தாமதமாக விண்ணப்பித்தவர்களே தோற்றவேண்டுமெனவும், இந்த ஆண்டு கணிதம் தனியான பாடநெறியாகவும் விஞ்ஞானம் தனியான பாடநெறியாகவும், ஆரம்ப கல்வி தனியான பாடநெறியாகவும் கற்பிக்கப்படும் என்றும் திரு. அலெக்ஸாந்தர்தெரிவித்தார்.

கடந்த ஆண்டு கணிதமும், விஞ்ஞானமும் ஒன்றிணைந்த பாடநெறியாகவே கற்பிக்கப்பட்டுவருகிறது. (107)

## "நாளைய சந்ததியை
# இரத்தம் தோய விடக்கூடாது என்பதற்காகபோராடுகிறோம்'
## மகளிர் பொறுப்பாளர் லூசியா கருத்து

(வடமராட்சி)

நேற்றைய சந்ததி இரத்தம் தோய்ந்தது என்பதற்காக நாம் நாளைய சந்ததியையும் ரத்தம் தோயவிடக்கூடாது இதற்காகவே நாம் போராடுகின்றோம்'' என்று வடமராட்சி விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப்பொறுப்பாளர் செல்வி லூசியா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முன்னுள் வடமராட்சிப் பொறுப்பாளர் மேஜர் சலாமின் இரண்டாவது நினைவுதினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது அவர் இவ்வாறு கூறினுர்.

மேஜர் சலாமின் விளையாட்டரங்கில் இமையாணன் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. கே. நற்குணம் தலைமையில் நடைபெற்ற நினைவு தினவிழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அடுப்பங்கரையில் இருந்த பெண்கள் ஆயுதம் தாங்கிய வீரப்பெண்களாக மாறியுள்ளார்கள் என்பதை இன்று நேரில் காண்கின்றீர்கள். கடந்த காலத்தில் இறந்த 1400 புலிகளின் இடங்களை நாம் நிரப்புவதோடு எமது தாயக மண்ணில் நிரந்தர அமைதிக்காகப் போராடுகிறோம் ஆயிரமாயிரமாய் ஆண், பெண்சகலரும் சேர்ந்து ஆயுதமேந்திப் போராடவேண்டும்''

''எமது தாயக மண்ணைமீட்கவே அண்ணன் மேஜர் சலாம் தன்னுயிரை கொடுத்து தியாக வேங்கையாக மாறினுர் அவர் வழியில் நாமும் தொடர்ந்து செல்வோம்''

பெருந்திரளான சனத்திரள் மத்தியில் நடைபெற்ற விழாவில், எஸ். மகேந்திரராசா, தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அரசண்ணு, வாஞ்சி, நாதன், சூசை, குணபால், மாலினி, குணம், செங்கதிர் ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

சலாமின் நினைவாக சனிக்கிழமை நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களாள யங் கம்பன்ஸ், இமையாணன், சிவானந்தா, செல்வா, பாரதி, வள்ளுவன் ஆகிய கழக வீரர்களுக்கு மேஜர் சலாமின் தாயார் திருமதி சின்னக்குட்டி சின்னப்பிள்ளை பரிசில வழங்கினுர். (51)

## இந்துசமய

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இப்போட்டிகள் 27 நிலையங்களில் நடைபெற்றன. (52)

[குறிப்பு: மேற்படி போட்டிகளில் பரிசுபெற்றவர்களில் ஒருபகுதியினரின் பெயர்கள் 'ஈழநாடு'வில் முன்னர் வெளிவந்திருந்தது.]


ஹரன்
சினிமா
தினசரி 4-00, 7-00. 9-30
சனி, ஞாயிறு நாட்களில்
10-30, 2-30 6-30, 9-30
விஜயகாந், ரேகா செந்தில் நடித்த
சொல்வ தெல்லாம் உண்மை
(ஏ 738)


## முதலிடம் பெற்றுர்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டிகளில் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான 100 மீற்றர், 200மீற்றர் ஓட்டப்போட்டிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன சி. குலஇந்திரன் 1ம் இடத்தைத் தட்டிக்கொண்டார். (52)

## கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி கதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை சிறப்பாக நடைபெறும்.

இன்று கிரியாரப்பத்துடன் ஆரம்பமாகி, நாளை எண்ணெய் சாத்துதலும் நாளை மறுதினம் பகல் மஹா கும்பாபிஷேகமும் மாலையில சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். 'வியாகரண சிரோண்மணி' சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகப் பணியாற்றுவார்.

## இன்றைய

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ளது, விடுதலைப்புலிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அவர்கள் ஆயுதங்களுடன் வைத்தியசாலைக்குள் வருவதில்லை.

''எனினும் இன்றைய நிலை ஒரு ஸ்திரமான நிலை என்று கூறமுடியாது. அடுத்த சில மாதங்களில் என்ன நடக்கும் என்று கூறமுடியாது. நிரந்தர சமாதானம் ஏற்படுமா என்றும் கூறமுடியாது.

''நிரந்தர சமாதானம் ஏற்பட்டு தமிழ் டாக்டர்கள் மீண்டும் மட்டக்களப்புக்கு வந்து சேவையாற்றவேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும்''. (121)

### எட்டு வருடங்களுக்குப் பிறகு

# அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை அதிகரிப்பு

(அக்கரைப்பற்று)

கடந்த எட்டு வருடங்களுக்குப்பின்பு அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை இந்த வருடம் 41300 ஹெக்டயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருவமழை சீராகஇருந்ததும், மிகப்பெரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரத்தில் போதுமான நீர் இந்த வருட சிறுபோக நெற்செய்கைக்கு வழங்குவதற்கு தயாராக இருந்ததும், விவசாயிகள் மிகவும் சுலமாக வங்கிக்கிளைகளில் இருந்து கடன் உதவியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததும் இதற்கு முக்கிய காரணமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை நீண்ட இடைவெளிக்குப்பின் அதிகரித்துள்ளபோதிலும் விவசாயிகள் நெல் உற்பத்திக்கு செலவிடும் செலவுகள் அதிகரித்துள்ளன அதிகமான விவசாயிகள் வேறு தொழில் இல்லையே என்ற ஒருகாரணத்தினுல் நெற்செய்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கிறுர்கள். தற்போது ஒரு ஏக்கர் நெற்செய்கையில் செலவிடும் செலவு நெல் அறுவடையின்போது பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கிறது என்று தெரிவிக்கிறுர்கள்.

இந்த நிலைமை ஏன் என்று கவனிக்கும்போது இந்த மாவட்டத்தின் சுவாத்தியத்திற்கும் கூடுதலான விளைச்சலைத் தரக்கூடிய புதிய இன நெல் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும், விவசாயிகளின் பணம் பூராவும் இரசாயன உரத்திற்கும், கிருமிநாசினி வகைகளுக்கும், ஏனைய உபகரணங்களுக்குமாகவே செலவாகின்றன என்றும் தெரிய வருகிறது. எதிர்காலத்தில் உள்நாட்டில் கிடைக்ககூடிய உரவகைகளை பயன்படுத்துவதற்கும், கால் நடைகளைக் கொண்டு நிலத்தைப்பயன்படுத்துவதற்குமான ஒரு நடவடிக்கை மாவட்ட மட்டத்திலுள்ள விவசாய அதிகாரிகளினுல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்த மாவட்டத்தின் கரையோரப்பகுதியிலுள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் நெல் உத்தரவாத விலையில் உரிய காலத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்வதில்லை. கடந்த பெரும் போகத்தின் போது உற்பத்தி செய்யப்பட்ட சிவப்புநிற நெல் சுமார் ஐந்து லட்சம் புசல் வரையில் விவசாயிகள் விற்பனை செய்ய முடியாது இருக்கிறது என்றும் அறிய வருகிறது.

---

## தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலகம், இன்று திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதனைத் திறந்து வைப்பார். (153)

---

### கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**கிழக்குக்கு விஜயம்**

யாழ். திரும்புவதற்கு முன் கிழக்கு மாகாண நிலவரத்தை அறிந்துகொள்வதற்கு நீதி அமைச்சரும், வடக்கு, கிழக்கு சமாதானக் குழுத் தலைவருமான ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீத் உடன் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் கிழக்கு மாகாணம் செல்கிறுர்கள்.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு, நிர்வாகம் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படலாமெனத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், அந்தந்த மாவட்டப் பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்திப்பதோடு, விடுதலைப் புலிகள் பொதுமக்களையும், முஸ்லிம் மக்களையும் சந்திக்க இருப்பதாக அறியக்கிடக்கின்றது. (152)

---

## கலைஞர் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது

[சென்னை]

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதியின் 67வது பிறந்த தினம் நேற்றுச் சென்னையில் கலைவாணர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

இந்திய குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, ஆளுநர் பர்ளுலா, நிதியமைச்சர் பேராசிரியர் மது தண்டவதே மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர். (ம)

---

### விபுலானந்தர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரன் மட்டக்களப்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிஞர். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:.

''சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரிக்கும், இராமநாதன் இசை நடனக் கல்லூரிக்கும் இடையேயுள்ள சம்பள முரண்பாடு சம்பள மீளாய்வுக் குழுவுடன் பேசித் தீர்க்கப்படும். இங்கு கடமையாற்றும் விரிவுரையாளர்களின் சம்பளமும் அவர்களின் தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும். இங்கு போதிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவதுடன் பகுதிநேர விரிவுரையாளர்களும் விரைவில் நியமிக்கப்படுவார்கள்.''

திரு. கே. சி. லோகேஸ்வரனும், இந்து கலாசார அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரதி பணிப்பாளர் ஜனுப் ஏ. எம். நகியாவும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர், மட்டக்களப்பு கலாசாரப் பேரவையினர், இந்து இளைஞர் மன்றத்தினர், கிழக்குப பல்கலைக் கழக உபவேந்தர் திரு எஸ். சந்தானம் விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகள் பெற்ருேர் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசினுர்கள்.

மட்டக்களப்பில் அமைக்கப் பட்டுவரும் கலாசார மண்டபத்தையும் அவர்கள் பார்வை இட்டனர். (121)

---

### மக்கள் வங்கி

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

பணத்தைக் கட்டியவர்களது நகைகள் தற்போது மீளளிக்கப்பட்டு விட்டன. அடகு வைத்த தமது நகைகளை மீட்டு கொள்வதற்காக 1989 செப்டம்பர் மாதத்தின் பின்பு பணத்தைக் கட்டியவர்களுக்கு வருகிற ஜுலை ஆகஸ்ட் மாதத்தில் அவற்றை மீளளிப்பதற்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

''பொது மக்கள் அடகு வைத்த தமது நகைகளை விரைவாக மீட்டுக்கொள்ள விரும்பின், ஜுன் மாதம் 6-ஆம் திகதிக்கு முன்பு உரிய கிளைகளில் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்'' ''

---

### உல்லாசப் பிரயாணத்துறை

# அபிவிருத்தியில் இலங்கை முன்மாதிரி நாடாக தெரிவு

[கொழும்பு]

ஆசியாவின் உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திக்கு இலங்கையை முன்மாதிரி நாடாக, ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார சமூக கலாசார நிறுவனம் எடுத்துக் காட்டியுள்ளது.

உலக உல்லாசப்பயண ஸ்தாபனமும் இத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளது.

''ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான நிதியும் உல்லாசப் பயணத்துறை வளர்ச்சியும்'' என்ற தலைப்பில் முதலாவது கருத்தரங்கை கொழும்பில் நடத்துவதற்கு இந்த நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இக்கருத்தரங்கில் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரதான கடன் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (அ)

---

## புதிய அதிபர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. கே. எஸ். குகதாசன் இன்று திங்கட்கிழமை பதவியேற்கின்ருர். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவரும், முன்ஞள் ஆசிரியருமாவார்.

---

### வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியில் விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பவர்கள் பதினெட்டு வயதுக்கும் இருபத்தைந்து வயதுக்கும் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பபடிவங்கள் விவசாயப் பணிப்பாளர் (வடக்கு கிழக்கு) 4-, காங்கேசன்வீதி, திருகோணமலை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வவுனியா விவசாயக் கல்லூரியில் இந்த விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம் எனத்தெரியவருகிறது. (ம)

---

## இணக்கசபை

(நாவற்குழி

கொடிகாமம் பிரதேசப் பகுதிக்கான இணக்கசபைத்தெரிவு பொதுமக்களாலேயே நடாத்தப்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ராகுலன் தலைமையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இத்தெரிவுக் கூட்டத்தில் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா கலந்துகொண்டு இணக்கசபை பற்றிய ஒழுங்குவிதிகளையும் சட்டதிட்டங்களையும் அனைவருக்கும் விளக்கிக் கூறிஞர். (107)

---

### ஆறு லட்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரியினுல் உறுதிப்படுத்தி, விண்ணப்பக்கடிதத்துடன் இணைத்து அனுப்பினுல் அவர்களுக்கு புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். (அ)

---

### இத்தாலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர், 5 இலங்கையர்களிடம் பணம் பெற்று அவர்களை பம்பாய் ஊடாக இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முற்பட்டபோது முறையான விசா பெற்றுக்கொள்ளாதமை கண்டுபிடிக்கப்பட்டு விமான நிலைய அதிகாரிகளால் திருப்பப்பட்டனர்.

அந்த முயற்சி தோல்வி அடைந்த பின்னர் ஐவரும் நைஜீரியாவுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு அங்கு இருவாரங்கள் தங்கி மீண்டும் இரண்டாவது தடவையாக இத்தாலிக்குள் நுழைய முயற்சிக்கப்பட்டது. அதுவும் தோல்வியடைய ஐவரும் கொழும்புக்கு நேரடியாகவே திருப்பி அனுப்பப்பட்டனராம்.

இத்தாலியப் பெண்ணை திருமணம் செய்துள்ள இவர், தங்களிடம் ஆறு லட்சம் ரூபா பெற்றுக்கொண்டதாக இலங்கை மீண்ட ஐவரும் நீர்கொழும்பு குற்றப் புலனுய்வுத் துறைப் பொலிஸாரிடம் முறைப்பட்டுள்ளனர்.

விடுமுறையில் கொழும்புக்கு வந்து செல்லும் இந்த இத்தாலிய விமான ஓட்டி மீது பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

---

### கமிஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் கமிஷனும், பிரத்தியேக கடன்வசதிகளும் வழங்கப்படுமென்று வங்கி உதவி முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் 80 இளைஞர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அனுசரணையுடன் அந்த அந்த மாவட்டங்களில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியடைந்தவர்கள் இப்பதவிக்குத் தகுதியுடையவர்களாவர். [அ]

---

### சமூக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது; அரசியல் தலையீட்டிலிருந்து நிர்வாகம் தனிமைப் படுத்தப்பட வேண்டும். இன, மத வேறுபாடின்றி பிராந்திய சார்பற்ற நிர்வாக அமைப்பு இருக்க வேண்டும்.

சமூக அமைதியின்மையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் சட்டத்தின் முன் எல்லோரும் சமம் கிராமசேவையாளர் மட்டத்திலிருந்து அதிகாரிகள் வரை சமூக அநீதிகளை நீக்க வேண்டும். [ம]

---

### புலிகள் - அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி

என்று விடுதலைப்புலிகள் தூதுக் குழுவினர் வலியுறுத்தினர்.

பேச்சுவார்த்தைக்கு நீதி அமைச்சர் ஜனுப் ஹமீத் தலைமைதாங்கினுர். விடுதலைப் புலிகள் சார்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் (யோகி) ஆகியோர் கலந்துகொண்டனர். சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் என்ற அடிப்படையில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல சிறில்ரணதுங்கா, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர்வைஸ் மார்ஷல் வோல்ரர் பெர்ளுண்டோ, இராணுவத் தளபதி ஜெனரல் ஹமிலடன் வணசிங்கா, விமானப்படைத் தளபதி வைஸ் மார்ஷல் டபிள்யூ எஸ். குணவர்த்தன கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா, பொலிஸ் மாஅதிபர் ஏனர்ஸ்ட் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

---

# "எமது லட்சியப் பற்றை அரசு உணர்ந்துள்ளது"

**- ரஞ்சன்**

(நாவற்குழி)

''இலங்கை அரசு எமது போராளிகளினதும், தமிழீழ மக்களினதும் இலட்சியப் பற்றையும், உறுதிப்பாட்டையும் நன்கு புரிந்துள்ளது. அதனுல் தான் எமது போராட்டத்தை முறியடிக்கமுடியாமல் இன்று பேச்சுவார்த்தை நடாத்துகின்றது.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புத் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு ரஞ்சன், நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்கள் மத்தியில் நடாத்திய கருத்தரங்கில் கூறிஞர்.

மகா வித்தியாலய அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு ரஞ்சன் தொடர்ந்து பேசுகையில், ''கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தினுலும், இந்திய இராணுவத்தினுலும் நாம் பல இன்னல்களையும் பல இழப்புக்களையும் அடைந்தோம். ஆனுல் இன்று ஓரளவு அமைதியாக இருக்கிறோம். எமது கப்டன் மில்லரின் தாக்குதலினுல் பயமடைந்த இலங்கை அரசு, இந்திய இராணுவத்தை அமைதிப்படை என்று அழைத்து எம்மையெல்லாம் அழிக்க முயன்றது. ஆனுல் நடந்ததென்ன? தனது வல்லாதிக்கத்தை எமது தமிழ்மண்ணில் நிலைநிறுத்த முடியாமல் குறுகிய காலததிலேயே இந்திய ஆக்கிரமிப்புப் படை, தமிழீழ மண்ணிலிருந்து தோல்வியுடன் வெளியேறியது'' என்ருர்.

''நாம் எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் இலங்கை அரசுடன் பேச்சுக்குச் செல்லவில்லை. ஆனுல் நாம் விடுத்த நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது. எம்மை அழிக்க எந்த ஹெலிகொப்டர் பயன்படுத்தப்பட்டதோ அதே ஹெலிகொப்டர்தான் இன்று எம்மைப் பேச்சுக்கு அழைத்துச் செல்கிறது. எமது பலத்தை இலங்கை அரசு தவருகக் கணித்து, எம்மீது ஒரு அதர்ம யுத்தம் ஒன்றைத் தொடுக்குமானுல் நாமும் பல முன்மாதிரி முறைகளைக் கையாண்டு எம் வலிமையினுல் அதை அடக்கியே தீருவோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர் அமைப்பைச் சேர்ந்த முருகதாஸ் பேசுகையில் ''கடந்த 2 வருடகாலமாக நடைபெற்ற போராட்டத்தின்போது மக்களின் பங்கு அளப்பரியது. அந்த இக்கட்டான காலகட்டத்தில் மாணவர்கள்தான் போராளிகளுக்கும் மக்களுக்குமிடையே ஒரு பாலமாக அமைந்து போராளிகளுக்கு அனுசரணையாக நடந்துகொண்டனர். எனவே இனிவரும் காலத்திலும் எத்தனையோ சரித்திரப் படைப்புகளுக்கு மாணவர்களின் பங்களிப்பு எமக்கு முக்கியமானதாகும். மாணவர்கள் இந்த வெயில் கட்டுப்பாட்டுடன் திகழ்ந்தால் சிறந்த வீரர்களாகவும், கல்விமான்களாகவும் உருவாகலாம்'' என்ருர் (107)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.